உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை இலக்கம்: 12/2024

எனது இலக்கம் : HA/05/20/01/01/08/II
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05.
2024.12.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
ஆணைக்குழுச் செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள் /நியதிச் சட்ட சபை தலைவர்கள்.

<u>தேசிய பிறப்பத்தாட்சிப் பத்திரத்தை பிறப்பை நிரூபிக்கும் அடிப்படை ஆவணமாக அங்கீகரித்தல்</u>

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் (இ-மக்கள்தொகைப் பதிவேடு) ஆணையின்படி, பிறப்புடன் தொடர்பான தரவுகளை இலத்திரனியல்மயப்படுத்தி கோப்பிட்டு அம்முறைமையின் மூலம் தேசிய பிறப்புச் சான்றிதழ் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் வழங்கப்படுகிறது.

அதன்படி, 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பிறப்புப் பதிவுப் புத்தகம் மற்றும் 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள 2014 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் (இ- மக்கள் தொகைப் பதிவேடு) ஆணையின் படி வெளியிடப்பட்டுள்ள தேசிய பிறப்பத்தாட்சிப் பத்திரம் ஆகிய ஆவணங்கள் இரண்டில் ஏதேனும் ஒரு ஆவணம் நபரொருவரின் பிறப்பை நிரூபிக்கும் அடிப்படை ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என தங்களுக்கு இத்தாள் அறியத்தருகிறேன்.

எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு